மற்றும் அதிகளவில் மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017–2018 ஆம் கல்வியாண்டிலிருந்து 268 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இப்பாடப் பிரிவுகளை கையாள 660 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்காக அரசிற்கு ஆண்டிற்கு 40 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) காஞ்சிபுரத்தில் புதிய விளையாட்டு வளாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் நீச்சல் குள வளாகம், காஞ்சிபுரத்தில் முதன்மை நிலை விளையாட்டு மையம் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் நாட்டின் செல்வம். விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றை கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளைக்கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றது. எனவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளித்த அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்:

1. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு 42 ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் நவீன தரத்துடன்கூடிய புதிய விளையாட்டு வளாகம் ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளாகம் பார்வையாளர் மாடம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அறை, நிருவாக அறை, பயிற்சியாளர் அறை, வீரர்கள் உடை மாற்றும் அறை, கழிவறைகள், சேமிப்பு அறை முதலான வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூன் 19

2. திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் 5 கோடி ரூபாய் செலவில் நீச்சல் பந்தய குளம், பயிற்சி நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம், உடை மாற்றும் அறைகள், கழிவறைகள், அலுவலகம் மற்றும் பயிற்சியாளர்கள் அறையுடன்கூடிய உலகத்தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகம் அமைக்கப்படும்.

3. கெனாயிங் மற்றும் கயாக்கிங் எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. தற்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இவ்விளையாட்டு நடத்தப்பட்டு வருகிறது. சர்வதேச ரெகெட்டா எனப்படும் மிகப்பெரிய அளவிலான படகு போட்டிகளை நடத்தும் மையமாக சென்னை திகழ்கிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகம் அருகில், கெனாயிங் மற்றும் கயாக்கிங் விளையாட்டுகளுக்கு, முதன்மை நிலை விளையாட்டு மையம் ஒன்று 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

(ஈ) நியாய விலைக் கடைகளுக்கு விரல்ரேகை படிப்பி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் மைய வங்கியியல் கணினி சேவை முறை உருவாக்குதல், கூட்டுறவு நிறுவனங்களை நவீனமயமாக்குதல், மாதவரத்தில் நவீன சேமிப்புக் கிடங்கு கட்டுதல், சூரிய ஒளி கூரையுடன் சேமிப்புக் கிடங்குகள், நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பணியாளர்களின் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பது நமது பொது விநியோகத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நாடு முழுவதும் செயல்படும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நாம் பின்பற்றினாலும், வருமான அடிப்படையினைக் கருத்தில் கொள்ளாமல், பாகுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும்